

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (19.8.2024) கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைப் பெற்று வரும் சாலைப் பணிகளை நேரடியாக களஆய்வு மேற்கொண்டார். இந்த கள ஆய்வுப் பணிகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் முனைவர் ஆர்.செல்வராஜ், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) ச.ஜவஹர் முத்துராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் எம்.சரவணன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (டெக்னிக்கல்) இரா.சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோவூரில் ரூ. 45 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர் பா.சுதாகர் ஆகியோர் உள்ளனர்.

### நாகை மாவட்டம் - அக்கரைப்பேட்டை ஊராட்சியில்

# ‘நமக்கு நாமே’ திட்டத்தின் கீழ் புதிய சமுதாயக் கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

நாகப்பட்டினம், ஆக 20-

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிய சமுதாய கூடம் கட்டிடத்தினை சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் எஸ். ரகுபதி திறந்து வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டை ஊராட்சியில் முத்துமாரியம்மன் கோவில் அருகில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிய சமுதாய கூடம் கட்டிடத்தினை மாண்புமிகு சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று (19.08.2024) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்;, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்றையதினம் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் அக்கரைப்பேட்டை ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நமக்கு நாமே திட்டம் 2019-2020 மற்றும் 2021-2022 கீழ் மதிப்பீட்டில் பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.64,00,000/- அரசு நிதி ரூ.1,27,80,000/- என மொத்தம் ரூ.1,91,81,00,000/- மதிப்பீட்டில் சமுதாய கூடம் கட்டிடம் இன்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இச்சமுதாய கூடத்தில் சமுதாய கழிவறை ரூ.6.50 இலட்சம், கழிவறை கட்டிடம் ரூ.10 இலட்சம், சுற்றுச்சுவர் ரூ.25 இலட்சம், சமையலறை கட்டிடம் ரூ.6.50 இலட்சம் எனம் மொத்தம் ரூ.48 இலட்சம் கூடுதலாக இக்கட்டிடத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அக்கரைப்பேட்டை ஊராட்சி கடற்கரை ஒட்டி உள்ள ஊராட்சியாகும். இங்கு சுமார் 15000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த ஊராட்சியில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் மீன்பிடி தொழில் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாகும். இங்கு மீன்பிடி துறைமுகம் உள்ளது. இவ்வூராட்சிக்கு தினசரி சுமார் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் துறைமுகத்திற்கு தொழில் சம்மந்தமாக வந்து செல்கின்றனர். இந்த கிராமம் ஏனைய கிராமங்களைவிட பொருளாதாரத்தில் சிறந்து விளங்குகின்றது. இந்த கிராமம் கடற்கரையினை ஒட்டியுள்ளதால் மழைக்காலங்களில் அதிக மழைப்பொழிவலும், புயலாலும் பாதிக்கப்பட்டு அவ்வப்போது மக்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும் பேரிடர் காலங்களில் பொது மக்களை பாதுகாப்பாக தங்க வைக்க போதுமான இடம் கிடையாது. எனவே இந்த ஊராட்சி பஞ்சாயத்தார்கள் மற்றும் பொது மக்களால் பல முறை கோரிக்கை அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நமக்கு நாமே திட்டத்தின்கீழ் அக்கரைப்பேட்டை ஊராட்சி, முத்துமாரியம் மன் கோவில் அருகில் சமுதாய கூடம் கட்டும் பணி தேர்வு செய்யப்பட்டு பொது மக்கள் பங்களிப்புத் தொகையுடன் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ்,நாகப்பட்டினம் நகர மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற் பொறியாளர் எஸ்.கே.கண்ணன், அக்கரைப்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் அழியாநிதி மனோகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ரேவதி, திருமதி.செபஸ்தியம்மாள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி

# ஜெனரல் எஸ். பத்மநாபன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.20–

இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி, ஜெனரல் எஸ்.பத்மநாபன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், ”நமது தேசத்தின் பாதுகாப்பில் ஜெனரல் எஸ்.பத்மநாபன் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு எப்போதும் நினைவுகூரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி, ஜெனரல் எஸ். பத்மநாபன் அவர்களின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. அவரது முன்மாதிரியான தலைமையும், நமது தேசத்தின் பாதுகாப்பில் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் எப்போதும் நினைவுகூரப்படும்.**



**இந்த இக்கட்டான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பட்டியல், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட

# மக்களுக்கான இட ஒதுக்கீட்டைப் புறக்கணிக்கும் யு.பி.எஸ்.சி.!

## கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. குற்றச்சாட்டு!

சென்னை, ஆக.20-

பட்டியல், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை யு.பி.எஸ்.சி. புறக்கணிக்கிறது என்று தி.மு.க. எம்.பி. வில்சன் குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-



“ஆட்சேர்ப்பு செயல்முறையில் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி., பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டும் என்ற அரசியல் சாசன உத்தரவை யு.பி.எஸ்.சி., எப்படி புறக்கணித்துள்ளது என்பதற்கு யு.பி.எஸ்.சி., இன்று வெளியிட்டுள்ள பின்வரும் விளம்பரம் ஒரு சிறந்த உதாரணமாகும்..

பதவிகளுக்கான எந்த இட ஒதுக்கீடும் வழங்காமல், 10 இணை செயலாளர் பதவிகள், 35 இயக்குனர் / துணை செயலாளர் பதவிகள் என மொத்தம் 45 பணியிடங்களுக்கான அறிவிப்புகளை யு.பி.எஸ்.சி. வெளியிட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், ஒன்றிய அரசு ஊழியர்கள் இந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக இது போன்ற விளம்பரங்கள் வெளியிடும்போது, மொத்தமுள்ள 45 இணைச் செயலாளர் மற்றும் இயக்குநர், துணை செயலாளர் பதவிகளில் குறைந்தது 2223 விண்ணப்பதாரர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் எஸ்.சி. / எஸ்.டி. மற்றும் ஓ.பி.சி. பிரிவுகளில் இருந்து தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இது அரசியல் சாசனத்தை மீறும் செயல் இல்லையா?

பிரதமர் அவர்களே, நீங்கள் இந்த சட்டவிரோதமான, இடஒதுக்கீட்டுக்கு எதிரான ஆட்சேர்ப்பு செயல்முறையை தொடரப் போகிறீர்களா அல்லது அரசியல் சட்ட இடஒதுக்கீட்டு முறையை செயல்படுத்தி புதிய நியமனத்திற்கு அழைப்பு விடுக்கப் போகிறீர்களா?” என தெரிவித்துள்ளார்.

### ஒட்டப்பிடாரம் தொகுதியில் - இன்று முதல் 3 நாட்களுக்கு

# கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிவிப்பு!

துத்துக்குடி, ஆக. 20-

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் 20, 21, 24 தேதிகளில் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

2024 ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்திய நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியின் வேட்பாளராக தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட்ட கனிமொழி கருணாநிதி 5,40,729 வாக்குகள் வழங்கி 3,92,738 வாக்குகள் வித்தியாசத்தில் இரண்டாவது முறையாக மக்கள்



பெருவெற்றியை தந்தனர்.

மாபெரும் வெற்றியை வழங்கிய வாக்காள பெருமக்களுக்கும் சிறப்பான முறையில் தேர்தல் பணியாற்றிய இந்தியா கூட்டணி கட்சியினருக்கும் நேரடியாக நன்றி தெரிவிக்கும் விதமாக ஆகஸ்ட் 20,21,23 ஆகிய தேதிகளில் கீழ்க்காணும் பகுதிகளில் உள்ள பொது மக்களை சந்திக்கிறார்.

20.08.2024 - செவ்வாய்க்கிழமை மாலை மாலை 5 மணி தருவைக்குளம் மாலை 5.30 மணி புதியம்புத்தூர் மாலை 6 மணி ஒட்டப்பிடாரம் மாலை 6.30 மணி ஒசனூத்து இரவு 7.15 மணி அக்கநாயக்கன்பட்டி இரவு 7.45 மணி மருதன்வாழ்வு இரவு 8.30 மணி அயிரவன்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளிலும், 21.08.2024 புதன்கிழமை மாலை 5 மணி புதுக்கோட்டை மாலை 5.30 மணி தங்கம்மாள்புரம் மாலை 6 மணி முடிவைத்தானேந்தல் மாலை 6.45 மணி பேரூரணி இரவு 7.30 மணி செக்காரக்குடி இரவு 8 மணி தெய்வச்செயல்புரம் இரவு 8.30 மணி வல்லநாடு இரவு 9 மணி வசவப்பபுரம் ஆகிய ஊராட்சி பகுதிகளிலும்,

24.08.2024 - சனிக்கிழமை மாலை 5 மணி குலையன்கரிசல் மாலை 5.30 மணி எம். சவேரியார்புரம் மாலை 6 மணி ராஜிவ் நகர் மாலை 6.30 மணி மாதாநகர் சந்திப்பு இரவு 7 மணி தாளமுத்துநகர் மெயின் ரோடு ரோசம்மாள் பேருந்து நிறுத்தம், இரவு 7.30 மணி ஹவுசிங் போர்டு இரவு 8.00 மணி பண்டாரம்பட்டி ஆகிய மாநகராட்சி பகுதிகளிலும் மற்றும் ஊராட்சி பகுதிகளிலும் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட ஒன்றிய, பகுதிச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதியில்

# தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகம் திறந்திடுவீர்!

## ஒன்றிய அமைச்சர்களுக்கு - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

புதுடெல்லி, ஆக. 20 -

பெரம்பூர் அல்லது ஆர். கே.நகர் பகுதியில் தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகத்தை அமைக்கும்படி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராயே எம்.சிந்தியா ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதியைச் சேர்ந்த மக்கள் என்னிடம் வழங்கியுள்ள மனுவில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதியில் தபால் அலுவலகத்துடன் இணைந்த கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்கும் அலுவலகத்தை அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கடந்த சில வருடங்களாக மேல்படிப்பு, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா செல்வதற்கு என நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை தாங்கள் அறிவீர்கள். இதனால் புதிதாக வெளிநாடு செல்ல முயலும் மக்களின் எண்ணிக்கை கூடி வருவதால், பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) கேட்டு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**கடவுச் சீட்டு அலுவலகம் ஒன்று கூட இல்லை!**

வளர்ந்து வரும் கடவுச் சீட்டுக் கோரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து விரைவில் கடவுச்சீட்டு வழங்க வேண்டும் என்ற கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் (பாஸ்போர்ட் சேவா கேந்திரா) இல்லாத இடங்களில் அமைந்துள்ள தலைமை தபால் அலுவலகம் அல்லது தபால் அலுவலகத்துடன் இணைந்து செயல்படும் வகையில், தபால் அலுவலகத்துடன் இணைந்த கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தை அமைக்கும் திட்டம் 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவரை




நாடெங்கும் 429 இடங்களில் இதுபோன்ற அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய தொகுதிகளில் ஒன்றான எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் ஒரு கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் கூட இல்லை. சென்னையில் அமைந்தகரை, சாலிகிராமம் மற்றும் தாம்பரம் முதலான இடங்களில் மட்டும் தற்போது கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவை மத்திய சென்னை மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளாகும். எனது தொகுதியைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு சற்று தொலைவான இடங்களில் அமைந்துள்ள கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே, எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதிகளில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களில் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தையும் அமைத்து தபால் அலுவலகம் மற்றும் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் (போஸ்ட் ஆபீஸ் மற்றும் பாஸ்போர்ட் சேவா கேந்திரா) அமைத்துத் தரும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். ஒன்றிய வெளியுறவுத்துறை, தகவல் தொடர்பு துறையும் இணைந்து இத்தகைய தபால் அலுவலகம் பாஸ்போர்ட் சேவா கேந்திரா அலுவலகங்களை அமைக்க வேண்டும் என்பதால் இக்கோரிக்கையை மேற்படி இரு அமைச்சகங்களுக்கும் ஏற்கப்பட்டு விரைந்து ஆவன செய்யப்படும் என்று நம்புகின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதங்களில் கூறியுள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மறைந்த முன்னாள் இந்திய ராணுவ ஜெனரல் எஸ்.பத்மநாபன் அவர்களின் உடல் வைக்கப்பட்டுள்ள சென்னை அடையாறில் உள்ள இல்லத்திற்குச் சென்று அவரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மௌலானா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.